மேலதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்க வேண்டுமென்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில், இது சம்பந்தமாக ஒரு பொது உத்திரவு பிறப்பிக்கக் கிராம முன்னேற்ற உள்ளாட்சி இலாக்கா நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சியிலே டிமாண்டு நோட்டிஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக நகராட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில, அது வந்து சேரவில்லை என்று சொன்னார்கள். இது முறையாகச் சேர்க்கப் பட்டதா என்று அறிய விரும்புகிறேன். அப்படிச் சேர்க்கப்படவில்லை யென்றால் அதற்குச் சம்பந்தப்பட்டவர் யார்? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அது முறையாகத்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கான நிதியைப் பெறுவதற்கு தலைமை அதிகாரியிடத்திலிருந்து அனுமதி பெறவேண்டும் என்ற காரணத்தினால் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, as a general rule, all the Government buildings and other allied buildings are exempt from municipal taxes if they apply for it. Have the Government taken any steps in this matter to apply for such exemption? I mean, have any steps been taken by the Sub-Registrar's Office, Kuzhiturai for exemption from municipal tax for its buildings?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கனம் உறுப்பினரின் யோசனையை அரசு பரிசீலனை செய்யும். குழித்துறை துணைப்பதிவாளர் அலுவலக சார்பில் நகராட்சி வரி விலக்குபற்றி எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

Advertisement for products of Khadi Department.

*546 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether the Khadi Department has been advertising its products through the A.I.R. Commercial broadcasts; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) ஆம்.

(இ) வானொலியில் ''தேன் கிண்ணம்'' ஒலிபரப்பு நேரத்தில் பின் வரும் ஒரு குறிப்பிட்ட நேர விளம்பரம் 3-11-69-லிருந்து 21-1-70 வரை தமிழக கதர் கைத்தொழில் வாரியத்தால் ரூ. 3,980 செலவில் தரப் பட்டது.

பாட்டு :

"அண்ணல் காட்டிய அறவழி காத்திட
எண்ணற்ற நூற்பாளர் இனிதாய் வாழ்ந்திட
வாங்கிடுவீர் கதரே! கதரே!

உரைநடை :

காதி கிராப்ட், திருச்சி எம்போரியம்
தமிழ் நாடு அரசு காதி நிலையங்களில் கதர் வாங்குங்கள்.
தீபாவளிக்கு பத்து சதவிகிதம் தள்ளுபடி உண்டு.

இந்த உரைநடை 3-11-1969-லிருந்து 8-11-1969 வரை ஒலிபரப்பப் பட்டது.

1970 மார்ச் 26]

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : இம்மாதிரி, கைத்தறித் துணிகளை பற்றியும் விளம்பரம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கதர்—கைத்தொழில் வாரியத்தின் பொறுப்பில் இருக்கிற காரியத்தைத்தான் சொன்னேன். கைத்தறியைப் பற்றிய விவரம் தேவையானால், அது அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷய மாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 549, 550, 551, 552, 553, 554, 555, 556 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள் ளப்படும்.

Conference of Assistant Public Prosecutors in Thanjavur.

*557 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether any conference was held by the Assistant Public Prosecutors on 10-3-1968 at Thanjavur;

(b) if so, the details thereof?
assurance during the course of the conference that the Grade-II Assistant Public Prosecutors will be made gazetted and the pay scales of Sub-Magistrates will be revised; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளும், முன்சீப் களும் ஒரே அளவுதான் படித்திருக்கிறார்கள். சப்-மாஜிஸ்ட்ரேட்டுகள் கிரிமினல் துறையில் வேலை செய்கிறார்கள். முன்சீப்கள் சிவில் துறை யில் வேலை செய்கிறார்கள். சப்-மாஜிஸ்ட்ரேட் பதவி இப்பொழுது 'கெஜட்டட் ராங்க்' ஆக இருக்கிறது. சம்பள அடிப்படையில் முன்சீப் சம்பளம் தர வேண்டும் என்ற கோரிக்கை அரசாங்கத்திற்குத் தரப் பட்டதே, அது சம்பந்தமாக அரசு நல்ல முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சப்-மாஜிஸ்ட் ரேட்டுக்கு இரண்டாண்டுப் பயிற்சி இருந்தால் எடுக்கலாம் என்ற விதி இருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புக்கு மூன்று ஆண்டுகள் பயிற்சி இருக்க வேண்டும். ஆனால், இரண்டு பிரிவினரையும் ஒரே பிரிவாக்க வேண்டும், டிஸ்ட்ரிக்ட் முன்சீப்-கம்-சப்-மாஜிஸ்ட்ரேட் என்று ஆக்க வேண்டும் என்ற ஒரு யோசனை இருந்தது. நம்முடைய உயர்நீதி மன் றம் அதைச் சிபாரிசு செய்தது. இதற்கிடையில் சப்-மாஜிஸ்ட்ரேட்டுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை வந்து, உயர் நீதிமன்றத்திற்கும் அது அனுப்பப்பட்டு, அரசாங்கமும் அதிலே கவன மும் செலுத்தி வந்தது. இடையில் சம்பளக் கமிஷன் வந்துவிட்டதால், அந்தக் கமிஷனை இந்த இரண்டு பதவிகளையும் அதாவது சப்-மாஜிஸ்ட் ரேட், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் ஆகிய இந்த இரண்டு பதவிகளையும் ஒன்றாக்க லாமா அல்லது சம்பளத்தை மட்டும் உயர்த்தலாமா என்பதைப் பரிசீ லிக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.